அன்னை தமிழே அண்ணை தமிழே
அன்பனவே நிறைகின்ற வீரரைபாடு
ஓடும் நதியே அசைந்தாடும் அலையே
வீரத்தின் தீரரை நாளும் பாடு

மனசின் விழியில் இரவின் ஒளியில்
மாவீரர் நினைவே நினைந்தே பாடு
கனவின் வழியில் கால நதியில்
கண்ணான வீரரை காற்றே பாடு
தேசத்தின் புயல்களே உலகேபாடு
அன்னை தமிழே அண்ணை தமிழே

நீர் நடந்த இடம் எங்கும் தடம் தேட வேண்டும் உம்
வேர் படந்த தழம் எங்கும் நிதம் நாட வேண்டும்
விழி நீரில் பெருகும் பேர் அன்பின் ஈரம்
உம் வழக்கேற்றும் போது நடு நடுங்கும் தேகம்
உம்பாடல் பாட மனம் எல்லாம் ஊறும்
உங்கள் நினைவு உமைதேட தேட விழி எல்லாம் பூக்கும்
ஈழக்கனவு ஈழக்கனவு

அன்னை தமிழே அண்ணை தமிழே

கார்த்திகையின் செல்வங்களை காலம் மாற வேண்டும் எம்
காவியத்தின் வீரர் நீங்கள் எம்மையாள வேண்டும்
அல்லலுறும் தழிழீழம் உங்களாலே மீளும் நாம்
சொல்லி அழும் வேதனைகள் உங்களாலே தீரும்
உங்கள் முகம் காண தேசம் எங்கும் நாழும்
உமைத்தேடுது நம் தேசம் வாழ நாம் எல்லாம் மீழ்க
நீங்கள் வேண்டும் நீங்கள் வேண்டும்